தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 மடங்கல்/கன்னி செப்/அக்-15-90) ஓர் உருபா (இதழ் எண்: 141)

இப்பொழுதுள்ள அரசியல்காரர்கள் அனைவரும் பதவி, பணம், புகழ்-ஆகியவற்றுக்கு அலைபவர்களாகவே உள்ளனர்! மக்கள் நலம் கருதுபவர் ஆயிரத்தில், ஒருவர் இருப்பாரா என்பது ஐயமே!

இக்காலத்திற்கேற்ப, பார்ப்பனர்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்ளவில்லையானால், எதிர்காலம் அவர்களுக்கு அழிவை நோக்கியதாகவே இருக்கும்!

பாரதீய சனதாவின் ஆதரவுடன் தேசிய முன்னணி ஆட்சியமைக்கும் பொழுதே, கட்டுச் சோற்றுக்குள் பெருச்சாளியை வைத்துக் கட்டியதாகவே, அதன் நிலை இருந்தது. அத்வானியும், வாச்பேய்யும் பச்சைப் பார்ப்பனர்கள்! இந்தி—சமசுக்கிருத வெறியர்கள்! தீவிரமான மதப் பித்தர்கள்! இராசாசி, மொரார்சி தேசாய் இருவரையும் விட நச்சுத்தன்மை மாறுத பார்ப்பனிய வெளிப்பாடுகள்! அவர்களுக்கு அரசியலைப் பற்றியோ, ஆட்சியைப் பற்றியோ, இந்தியாவைப் பற்றியோ, அல்லது இங்குள்ள பல்வேறின மக்களைப் பற்றியோ, துளியும் கவலையில்லை. அவர்களின் ஒட்டு மொத்தக் கவலையெல்லாம், இந்தியாவில் வேரூன்றிய ஆரியத் தன்மையும் பார்ப்பனியத்தின் மத இன மேலாளுமைகளும்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இதுதான் பார்ப்பனக் குறும்பு!

இங்கு சுற்றி, அங்கு சுற்றி இறுதியில் வேதந்தான் அடிப்படை என்பர்!

'**தினமணி**' இறுதிப் பக்கம் இடது மூலையில், ஒவ்வொரு நாளும் **நாடோடி** என்னும் பார்ப்பனர் '**ஆன்மிகம்**' என்னும் தலைப்பில் புராண, இதிகாச, வேதங்களிலிருந்து, ஒவ்வொரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சிறு சிறு கதைகளையும் கருத்துரைகளையும் எழுதி வருகிறார். அவற்றில் முழுக்க முழுக்க பார்ப்பனியக் கோட்பாடுகளை நிலை நாட்டி விடுவார்.

கூறப் பெறுகின்ற கருத்து எதுவாயினும், அதைச்சுற்றி வளைத்துக் கொண்டு போய், இறுதியில் பார்ப்பனியத்தை நிலைப்படுத்துவது போல் முடித்து விடுவார். பொதுவாகப் படிப்பவர்களுக்கு அச் சூழ்ச்சி விளங்காது. ஆனால், பார்ப்பனர்களுக்கு அதில் என்ன இருக்கிறது என்பது விரைவில் விளங்கி விடும்.

எடுத்துக்காட்டுக்கு ஒரு செய்தியைப் பாருங்கள்! இது தினமணி (சென்னை) 16-7-90-இல் வெளிவந்தது.

ஒருமுறை ஒரு திருமணத்தில் மணமக்களுக்கு ஒரு வாழ்த்து மடல் வந்திருந்ததாம். அதில் "**மணமக்கள் இன்று போல என்றும் இருக்க வேண்டும்**" என்று ஒரு வாழ்த்துரை வந்ததாம்.

அவ்வளவு மணிச்சுருக்கமாக யார் அந்த வாழ்த்தை அனுப்பியவர் என்று பார்த்தார்களாம். இறுதியில் அது இராசாசி அனுப்பியது என்று கண்டு, அத்துணைச் சுருக்கமாகவும் பொருள் பொதிந்தவாறாகவும் இருப்பதற்கு அவருக்கு ஒரு மடல் எழுத, அவரின் அறிவாற்றலைப் பாராட்டி வியந்தனவாம், பார்ப்பனக் குஞ்சுகள் சில.

உடனே அவர்களுக்கு இராசாசி 'இ'து என் சொந்த சரக்கன்று; கம்பனுடைய மணிச்சுருக்க உரையிது; இராமாயணத்தில் சீதை அநுமனை 'இன்றென இருத்தி' என்று வாழ்த்துவதாக, கம்பர் பாடியுள்ளதை எடுத்துக் காட்டி விடைபெழுதியிருந்தாராம்.

இந் நிகழ்ச்சியை, அண்மையில் புராணிகர் ஒருவர் ஒரு கதைப் பொழிவில் (கதா காலட்சேபத்தில்) கூறி விட்டுக் கம்பருக்கு இத்துணை பெரிய அறிவுப் பெருமை போய் விட்டதே என்னும் மனவெரிச்சலில், 'இதைக் கம்பனிடமிருந்து தெரிந்து கொண்டதாக இராசாசி சொல்லியிருக்கிறார். ஆனால் கம்பன் இக் கருத்தை வேதத்திலிருந்து கடன் வாங்கியுள்ளான்' என்று கூறி, வேதத்தில் (எந்த வேதத்தில் என்று அவர் விளக்கவில்லை.) நடுவில் ஒரு வரி வருகிறதாம். அது மணமக்களை எப்படி வாழ்த்த வேண்டும் என்று கூறுகிறதாம். அது, 'இங்கேயே இருங்கள், இப்படியே இருங்கள்' என்பதாம்—என்று அந்த இராமாயணப் பொழிவாளர் கூறினாராம்-என்று நாடோடி எழுதுகிறார்.

எப்படி? பார்ப்பனர்களுக்கு எந்தக் கருத்தானாலும், எந்த உண்மையானாலும், அது வேதத்தில் இருக்கிறது என்று சொல்வதில்தான் பெருமை.

அனைத்துப் பெருமைகளும் வேதத்திற்குப் போய்ச் சேரவேண்டும் என்பதில் தானே அவர்கள் வெற்றியே உள்ளது. ஏனெனில் பார்ப்பனியம் மூச்சுவிட்டுக் கொண்டிருப்பதே வேதத்தினால் தான் என்பது அவர்களின் கருத்து. எனவே அதை விட்டுக் கொடுத்து விடுவார்களா, என்ன?

இதற்குப் பெயர்தான் பார்ப்பனக் குறும்பு!

—குத்தீட்டி.

ஆலங்குளம் அருளாளன் அன்புத் தொண்டு வாழ்க!

தென்காசி வட்டம், ஆலங்குளத்தில் உள்ள-தூயதமிழ்க் கொள்கையரும், தென்மொழி, **தமிழ்நிலம்** தொண்டில் விடுதலறியா விருப்புடைய தொண்டரும், உழுவலன்பரும் ஆகிய **தயாளன்** என்ற **அருளாளன்** அவர்கள், **தமிழ்நிலம்** வளர்ச்சியில் மிகு ஆர்வமும் அக்கறையும் கொண்டு, வெறும் வாய்ப் பேச்சினராக இன்றிச் செயலளவில் துணைநிற்கும் வல்லமையுடன் தமிழ்நிலத்திற்கு 56 (ஐம்பத்தாறு) அரையாண்டு உறுப்பினர்களையும் ஓர் ஆண்டு உறுப்பினரையும் சேர்த்து மொத்தம் உரு. 1450 (உருபா ஓர் ஆயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) தொகையைக் கடந்த 21-5-90 அன்று சங்கரன் கோயில் நகராட்சி மன்றத்தில் நடந்த மொழி ஞாயிறு **தேவநேயப்பாவாணர்** (அவர் சொந்த ஊர்) அவர்களின் (பாவலரேறு அவர்கள் திறந்து வைத்த) படத்திறப்பு விழாவின் பொழுது நல்கினார் என்பதைப் பெருமையுடனும் நன்றியுடனும் தெரிவித்துக் கொள்கிறோம். அருளாளன் அவர்களின் அருளாண்மைக்கும் அருமுயற்சிக்கும் தமிழ்நிலம் மீண்டும் தன் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. அருளாளன் அவர்களும் அவர் குடும்பமும் என்று முள தென்றமிழ் போல் இசை கொண்டு வாழ, தமிழ்நிலம் அகம் மலர வாழ்த்துகின்றது.

அருளாளனைப் பின்பற்றும் அன்பர்கள் இருக்கிறார்களா? இருந்தால் அவரைப்போல் செயல்திறன் கொள்வார்களா? கொண்டால், **தமிழ்நிலம்** செய்கின்ற பணி எவ்வளவு எளிதாகும்!

—**ஆசிரியர்.**

Scanned with CamScanner

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொஞ்சமும் மாறிவிடக் கூடாது. ஆரியத் தலைமைக்குச் சரிவு வந்து விடக் கூடாது என்பது தான்.

அண்மையில் பாரதிய சனதாவின், அதன் தலைவர்களான அத்வானி, வாச்பேயி இவர்களின் நடவடிக்கைகள் இந்தியாவில் உள்ள அனைத்து மக்கள் தலைவர்களுக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியையும் அறக்கேடான (தர்மசங்கடமான) ஒரு நிலையையும் உண்டாக்கியுள்ளன. தேசிய முன்னணி ஆட்சியின் தலைவர் வி. பி. சிங், அந் நடவடிக்கைகளால் பெரிதும் கலக்கத்திற்கு உள்ளாகிப் போனார்.

மண்டல் குழுவின் அறிக்கைச் செயல்படுத்தம் பற்றி வி. பி. சிங் எடுத்த துணிவான முடிவால், இந்தியாவில் பார்ப்பனியம் பெரும் ஆட்டங் கண்டு போய் உள்ளது. பாபரி மசூதி—இராமர் கோயில் சிக்கல் என்பது வெளிக்கு அவர்கள் கூறுகின்ற காரணமாக இருந்தாலும், இந்த நாட்டில் காலம் காலமாக, அஃதாவது ஆரிய வல்லாளுமைக்குப் பின், தன் மூப்பாக அதிகாரக் கொண்டையத்தில் ஏறி நின்று மக்களை அடிமைப் படுத்தி ஆட்டிப் படைத்து, இந்நாட்டிலுள்ள அனைத்து நலன்களையும் தாங்களே ஆண்டு நுகர்ந்து (அநுபவித்து) வந்த நிலைக்கு எங்கே ஒரு வீழ்ச்சி ஏற்பட்டு விடுமோ என்ற நிலையில், இந்நாட்டின்—மண்ணின் உரிமை மக்களான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதிகார, ஆட்சி வாய்ப்பு ஏற்படப் போகிறதே என்னும் பொருமைத் தீயால் புழுங்குகிறார்களே, இங்குள்ள பார்ப்பன மக்கள்—அந்த நிலைதான் உண்மையான அவர்களின் எழுச்சிக்கு அடிப்படையானது.

அவர்களின் இராமர் பிறந்த நிலக் (இராம ஜன்ம பூமி) கோரிக்கை வம்படித்தனமானது; உண்மையல்லாதது, பொய்—புரட்டானது; ஞாயமற்றது; முரட்டுத்தனமானது; மூடத்தனமானது; இன வெறி சான்றது; சூழ்ச்சியானது; வன்முறைத் தனமானது; இன்னோர் இனத்தை இகழக்கூடியது; இன அழிவை உள்ளடக்கியது; இராமனுக்கும் 'இந்து' என்னும் சொல்லுக்கும் முடிச்சுப் போட்டு, இல்லாத கற்பனைக் கதையை உண்மை என்று மெய்ப்பிக்கும் புரட்டுத்தனமானது.

உண்மையாகப் பார்க்கப் போனால் இராமன் சத்திரியன்; பிராமணன் அல்லன். மேலும் அவன் ஆரிய எதிர்ப்பாளன்; அவனுடைய தந்தை தசரதனே ஆரிய எதிரி! இராமனின் மாமனாராகிய சனகனே ஆரிய எதிர்ப்பியக்கத்தின் தலைவன்; தமிழ் முனிவர்களின் மெய்ப்பொருள் நூல்களாகிய உபநிடதங்களின் தந்தை. இத்தனை உண்மைகளையும் மறைத்துத் தங்களுக்குச் சார்பு படுத்தித் தங்களை உயர்த்திக் கொண்டனர் ஆரியப் பார்ப்பனர்கள்! ஆரிய எதிர்ப்பாளனாகிய இராமனைத் தங்களின் இனக் காப்பாளனாகவும், தமிழ் முனிவர்களின் மெய்ப்பொருள் நூல்களாகிய உபநிடங்களைத் தங்களின் வேத நூல்களின் இறுதிப் பகுதிகளாகவும் ஆக்கி, அன்றைய தமிழின அரசர்களையும் மக்களையும் ஏமாற்றி, ஒரு பெரிய அறிவு நல வரலாற்றையே அடிப்படையாக அமைத்துக் கொண்டனர்.

எப்படித் தமிழ்ச் சொற்களையெல்லாம் சமசுக்கிருதப் படுத்தினார்களோ, எப்படித் தமிழ்க் கலைகளை (இயல், இசை, நாடகங்களை) எல்லாம் ஆரியக் கலைகளாக உருமாற்றிப் பெயர் மாற்றி ஆரியப் படுத்தினார்களோ, அப்படியே பெருந் தமிழ்த் தெய்வங்களான **சிவன்**, **திருமால்**, ஆகியவற்றையும், திணை நிலத் தெய்வங்களான **முருகன்**, (சேயோன்), **கண்ணன்** (மாயோன்)—(இவ்விடத்தில் ஓர் உண்மையை உணர்தல் வேண்டும். கண்ணன் வேறு; திருமால் வேறு. திருமால் இறைவியாகிய பெண் தெய்வம் ஆணாகி வந்த வழக்கு. கண்ணன்—கிருஷ்ணன்—இடையர் குல அரசன். இவனும் தமிழனே. பாண்டிய குலத்தவன். யமுனை ஆற்றங்கரைக்குக் குடியேறிய பாண்டிய குலத்தினனாகிய சூரசேனனின் பெயரன். இவ்வளவில் இது போதும். மேலே விளக்கின் பெருகும்.)—**வேந்தன்** (இவன் வேறு; ஆரிய இந்திரன் வேறு), **வருணன்** (இவன் வேறு; ஆரிய வருண பகவான் வேறு. இவன் தமிழரின் கடலும் கடல் சார்ந்த நிலமுமான நெய்தலுக்குத் தலைவன்; ஆரிய வர்ணபகவான் புயலுக்கும், கடலுக்கும் அதிகாரி), காளி (மண்), மாரி (மழை)—ஆகிய தெய்வங்களும் ஆரியப் படுத்தப் படுத்தப் பட்டார்கள். அதன் பிறகு, ருத்திரன். விஷ்ணு (தமிழ் விண்ணு—வான் தெய்வம்) சுப்பிரமண்யன், கிருஷ்ணன், இந்த்ரன், வர்ணன், பத்ரகாளி, கிருஷ்ண மாரி— ஆகியோராக இந்து மதப் படுத்தப் பட்டார்கள். ஆரியர்களின் வேத மதமே இந்து மதம். (இத் தெய்வ வரலாறுகளையெல்லாம் எம் **திருக்குறள் மெய்ப்பொருளுரை** நூலில் மிக விரிவாக எழுதுவோம்.)

இக்கால் இந்திய ஆரியப் பார்ப்பனர்கள் இந்துமத அடிப்படைகள் தகரத் தொடங்கியவுடன், அவற்றை மேலும் வலுப்படுத்தவும், நிலைப் படுத்தவும் செய்கின்ற முயற்சிகளே பாபரி மசூதி—இராமன் பிறப்பு நிலப் போராட்டம் முதலியவை. ஆனால், இவற்றினும் மேலாக அவர்களைத் தாக்கக் கூடிய விளைவுகளை உண்டாக்குபவை மண்டல் குழு பரிந்துரைகள். எனவேதான் அவற்றை இதுவரையிருந்த பார்ப்பனிய அரசு செயல்படுத்த முன்வரவில்லை. வி. பி. சிங் தாம் அதைத் துணிந்து செயல் படுத்த முன் வந்தார்.

(தொடரும்)

ஆட்சித்துறையில் ஊழல்கள் பெருகுகின்றன!

நடுவண் அரசுத் துறையில், மாநில அரசுத் துறையில் ஆட்சி நிலையில், ஊழல்கள் நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், ஆண்டுக்கு ஆண்டு பெருகி வருகின்றன என்பது பலருக்குத் தெரியாது. ஊழல் நடக்கக் கூடாத அறமன்றத்துறையில் கூட இக்கால் ஊழல் நடப்பதாகக் கேள்விப் படுகிறோம். இந்நிலை மிகவும் வருந்தத்தக்கது; கண்டிக்கத் தக்கது. சில இன்றியமையாத் துறைகளில் நடைபெறும் ஊழல்கள் பற்றி இக் கட்டுரை விளக்குகிறது.

நடுவண் செய்தித்துறை அமைச்சகம், மேற்கு வங்காளம் மற்றும் வடகிழக்கு மாகாணங்களுக்கு 3 மூடுந்துகளுக்கான மேற்கூடு (பாடி)களைக் கட்டும் பணியில் 5.88 இலக்கம் உருபாவை வீண் செலவு செய்திருக்கிறது.

புது தில்லியில் உள்ள நடுவணரசின் மெய்ப்பொருள் ஆய்வு ஆணையத்தில் ஆட்சி முறை கேடுகள் நிறைய நடந்துள்ளன என்று இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறார்.

1) இந்த ஆணையத்திற்காக உரு 40,000 மதிப்புள்ள பொத்தகங்களை வாங்க வேண்டியிருந்தது. அவற்றை பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வாங்க வேண்டும் என்று முடிவு செய்யப் பெற்றது. இந்த முடிவின் படி அவர்கள் அந் நாட்டு நிறுவனங்களுக்கு இங்கிருந்தே எழுதி அப் பொத்தகங்களைத் தருவித்திருக்க முடியும். ஆனால், அவ்வாணையத் தலைவரும், இயக்குநரும், அவற்றை வாங்குவதைச் சாக்காக வைத்துக் கொண்டு, நேரே பிரிட்டன், அமெரிக்காவிற்கு ஒரு சுற்றுச் செலவே செய்தார்கள். இந்தச் செலவுக்காக அவர்கள் இருவர்க்கும் ஆன செலவு உரு. 89,000, 'சுண்டைக்காய் காற்பணம்; சுமைக்கூலி முக்காற் பணம்' என்பது போல, இவர்கள் ஆணையத்திற்காக வாங்க வேண்டிய பொத்தகங்களின் விலை உருபா நாற்பதாயிரந்தான். ஆனால், அவற்றை வாங்குவதற்காகச் செலவிட்ட தொகையோ எண்பத்தொன்பதாயிரம்! எப்படியிருக்கிறது! பொது மக்கள் பணத்தை அதிகாரிகள் எந்தெந்த வகையில் வீணகச் செலவு செய்கிறார்கள் என்பதை அறிய வயிறு எரிகிறது! இதில் இன்னொரு பெருங்கொடுமை என்னவென்றால், இவர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசியல் ஒப்புதலையும் முன் கூட்டியே பெறவில்லை என்பதுதான்; இதற்கு மேலும் ஒரு கொடுமை, இவர்கள் வெளிநாடு போய் வந்த செலவுக்கான பட்டியல்களையும் அரசுக்குக் காட்டவில்லை என்பது.

ஆனால், பெரிய ஒரு வாய்ப்புக்கேடு என்ன என்றால், இவர்கள் செய்து விட்ட ஊதாரித்தனமான செலவை, அது செய்யப்பட்ட பிறகே கண்டு பிடித்துக் கடிய வேண்டியிருந்தது. ஆனால் தடுக்க முடியவில்லையே. என்ன செய்வது?

வேலியே பயிரை மேய்ந்தால், பயிர் எப்படி வளரும்?

இந் நிறுவனத்தின் முறைகேடுகளாகத் தணிக்கை அதிகாரிகள் மேலும் பலவற்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவற்றைப் பார்த்தால், இந்திய குடிமக்களில் எவருமே இக் குற்றங்களைச் செய்த இவ்வதிகாரிகளைப் பொறுத்துக் கொள்ள மாட்டார் என்பது தெளிவாகத் தெரியவரும்.

1) இவ் வாணையத்தின் ஆட்சிக்குழு அதற்கென உறுதி செய்யப் பெற்ற கால இடைவெளிகளிலே, ஒழுங்காகவே கூடியதில்லை.

2) கூட்டப் பெற்ற கூட்டங்கள் சிலவற்றைப் பற்றிய நடவடிக்கை அறிக்கையும் கூட அரசுக்கு அனுப்பப் பெறவில்லை.

3) 1981-82-ஆம் ஆண்டு முதல் 88-89 ஆண்டு வரை (83-84 ஆண்டு தவிர) வரையறுக்கப்பெற்ற எல்லைகளுக்கு மீறியே ஆணையச் செலவு செய்யப் பெற்றுள்ளது.

4) ஆராய்ச்சித் திட்டக் குழுவின் முறையான ஒப்புதலின்றிக் கருத்தரங்குகள், பயண உதவித் தொகைகள், கல்வி உதவித் தொகைகள், என 88-89-இல் 68 பேருக்கு உரு 14.44 இலக்கம் செலவிடப் பெற்றுள்ளது. ஆனால் அத் தொகையைப் பெறுபவர்கள் யார் யார் என்று விளக்கத்தை அரசுக்குத் தெரிவிக்கவே இல்லையாம்.

5) இதில் இன்னொரு வகை ஊழல் மிகவும் வியப்பானது. இந் நிறுவனம் 20 பேருக்குக் கல்வி உதவித் தொகை வழங்கியுள்ளது. ஆனால் அவ்விருபது பேரும், அரசால் இசைவளிக்கப் பெற்ற எந்த ஒரு பல்கலைக் கழகத்திலோ, கல்வி நிறுவனத்திலோ பயிலாதவர்கள். எப்படியிருக்கிறது இதன் நடைமுறை!

6) இந்த நிறுவனம், 1984—89 ஆம் ஆண்டுகளில் பல கல்விக் கருத்தரங்குகளுக்கு உதவியிருக்கிறது. அதற்காக 8.24 இலக்கம் செலவிடப் பெற்றிருக்கின்றன. அச் செலவுக்கான சான்றுகள் அரசிடம் இது வரை அந் நிறுவனம் தரவில்லை.

7) இந் நிறுவனம், அதனுடைய பதிப்புகளுக்குக் கருத்துரையாளர் ஒருவரைத் தானே அமர்த்திக் கொண்டது. ஆனால் அவ்வாறு அமர்த்தக் கூடாது என்று அரசு கட்டளையிட்டிருந்தது. அக் கட்டளையை மீறி அக் கருத்துரையாளர் அமர்த்தப்பட்டிருக்-

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

தமிழக முதலமைச்சருக்கு ஒரு திறவை மடல்!

தஞ்சை--நலங்கிள்ளி. அமெரிக்கா
10-8-1990

மாண்புமிகு முதலமைச்சருக்கு,

வாழ்க தமிழ்! வெல்க தமிழினம்!

என் தாயகத்திலிருந்து—என் தமிழகத்திலிருந்து-பல்லாயிரம் கல்தொலைவிலுள்ள அமெரிக்க நாட்டிலே வந்து வாழுகின்ற நான், தமிழ் ஈழ மக்களின் இற்றை நிலைகுறித்து மனங்கலங்கி, இத் திறவை மடலை (open letter) வரைய முன் வரலாயினேன்.

நான் இம்மடலை எழுதுகின்றபோது என் கை நடுநடுங்குகிறது; அறிவு பதைபதைக்கிறது; நெஞ்சம் பட படக்கிறது. ஏனென்றால், நான் இம் மடலை எழுதுகின்ற இதே நேரத்தில், ஆண், பெண், சிறுவர்,சிறுமியர்,முதியோர் உட்படப் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழ்ப் பொதுமக்கள் சிங்களவரின் வான் படையால் கொல்லப் படுகின்றனர். பல்லாயிரக்கணக்கான தமிழ் வீடுகள் அழிக்கப் படுகின்றன. ஈழத்திலே நடப்பது "இனப் படுகொலை" (genocide) என நீங்கள் கூறியிருப்பது முற்றிலும் உண்மை. இலக்கக் கணக்கான தமிழ்ப் பொதுமக்களைக் கொன்று குவித்து விட்டு, மீந்த தமிழ் மக்களைத் தங்களுக்குக் குற்றேவல் செய்யும் அடிமைகளாக வைத்துக் கொள்வதே சிங்களவரின் உட்கிடக்கை. இந்த "இனப் படுகொலை"யைத் தடுத்து நிறுத்துவதெப்படி? தமிழக முதமைச்சர் என்ற முறையில் நீங்கள் என்ன செய்யலாம்?

ஈழத் தமிழ்ப் பொதுமக்களைப் பல்லாயிரக்கணக்கில் கொன்று குவித்திடும் ஆற்றல் சிங்களவரின் தரைப் படைக்கும், கடற் படைக்கும் கிடையாது. அதனால்தான் வன்னெஞ்சம் கொண்ட சிங்கள அரசு வான்படையை அனுப்பி, வானூர்திகளினின்று குண்டுகளை வீசிப் பல்லாயிரக் கணக்கான ஒன்றுமறியாத் தமிழ்ப் பொது மக்களைக் கொன்று குவிக்கிறது. இந்த வானூர்திக் குண்டு வீச்சுகளைத் தடுப்பதெப்படி?

சில ஆண்டுகளுக்கு முன், உருசியப் படைக்கும் ஆப்கானிய (Afganistan) விடுதலைப் படைக்கும் நடந்த போரின்போது, உருசியப்படை வானூர்திகளினின்று குண்டு வீசி, ஆப்கானியப் பொது மக்களைப் பெருமளவில் கொன்று குவித்தது. அக்கால், அமெரிக்க அரசு ஆப்கானிய விடுதலைப் படைக்கு, குண்டு வீசுகின்ற வானூர்திகளைத் தரையிலிருந்தே சுட்டு வீழ்த்த வல்ல, தோளில் வைத்துச் சுடும் தரை—வான் ஏவுகணைகளை (shoulder-fired Surface-to Air Missile; இதனைச் சுருக்கமாக (shoulder-fired SAM) என்று கூறுவர்) கொடுத்துதவியது. இந்த ஏவுகணைகள் அதிகக் கனமில்லாதவை. ஒரு வீரன் அதனைத் தன் தோள்மீது சுமந்து செல்லலாம். தன் தோளில் வைத்துக் கொண்டே, வானூர்திகளைப் பார்த்துச் சுடலாம். குறிபார்த்துச் சுட வேண்டுமென்பது கூட இல்லை. வானூர்தி பறந்து செல்லும் திசையைப் பார்த்துச் சுட்டாலே போதும். அந்த ஏவுகணை வானூர்தியைத் தேடிச் சென்று, அதன் மீது மோதி, அதனை அழித்தொழிக்கும். ஏவுகணை வானூர்தியை எப்படித் தேடிப் பிடிக்கிறது? வானூர்தி பறக்கும் போது, அது மிகுதியான வெப்பத்தை (heat) வெளியிடுகிறது. ஏவுகணை வானில் எங்கு வெப்பம் மிகுதியாக இருக்கிறது என்று அளந்து பார்த்து, வெப்பம் எங்கே மிகுதியாக இருக்கிறதோ, அவ் விடத்தை நோக்கிச் சென்று வானூர்தியைக் கண்டு பிடிக்கும். வானூர்தி எவ்வளவுதான் விசையாகப் (வேகமாகப்) பறந்தாலும் அதனைத் தேடிப்பிடித்து அழிக்க வல்லன இந்த ஏவுகணைகள். (இதனால் இத்தகைய தரை—வான் ஏவுகணைகளை "வெப்பம்நோக்கும் ஏவுகணைகள்" (heat-seeking missiles) என்றும் அழைப்பதுண்டு) இத்தகைய ஏவுகணைகளை அமெரிக்க அரசு ஆப்கானிய விடுதலைப் படைக்குக் கொடுத்தது. இந்த ஏவுகணைகள் உருசிய வான்படையின் வானூர்திகளையும் (air Planes) திருகிறக்கை ஊர்திகளையும் (helicopters) பெருமளவில் அழித்தொழித்து, ஆப்கானிய மக்களின் உயிரைப் பல்லாயிரக் கணக்கில் காப்பாற்றியது.

இது போன்ற தரை —வான் ஏவுகணைகள் சில தமிழ் ஈழ விடுதலைப் புலிகட்குக் கிடைக்குமேயானால், அவர்கள் சிங்கள வான் படையின் வானூர்திகளையும், திருகிறக்கை ஊர்திகளையும் (helicopters) சுட்டு வீழ்த்துவர். சிங்களவர் வானிலிருந்து குண்டு வீசிப் பொதுமக்களைக் கொல்லுவது தடுக்கப்படும்.

1986—வாக்கில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தரை—வான் ஏவுகணைகள் சிலவற்றை வெளிநாடுகளிடமிருந்து,பெரும் பணச் செலவில், அரும்பாடுபட்டு வாங்கி வந்திருந்தார்கள். தரை—வான் ஏவுகணைகள் மிக,மிக புதினமானவை. மிகச் சில நாடுகளே இத்தகைய ஏவுகணைகளைச் செய்கின்றன. பன்னாட்டுப் படைக்கருவிச் சந்தையில் (international weapons market) இத்தகைய ஏவுகணைகளை வாங்குவதென்பது மிகக் கடினம். வேண்டிய பணமிருந்தாலும் கூட, இத்தகைய புது முறை ஏவுகணைகளை வாங்கி விடுவதென்பது எளிதில்லை. இத்தகைய ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் போன்ற விடுதலை இயக்கங்களுக்கு யாரும் வெளிப்படையாக விற்க முன் வரமாட்டார்கள். கமுக்கமாகத்தான் (இரகசியமாகத்தான்) வாங்க

Scanned with CamScanner

வேண்டும். விடுதலைப் புலிகள் பலவாண்டுக் காலமாக உலகமெங்கும் தேடித் திரிந்து இத்தகைய ஏவு-கணைகளை வாங்கி வைத்திருந்தார்கள். ஆனால் இராசீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி வைத்த ''அமைதிப்படை'' விடுதலைப் புலிகளின் ஏவுகணை-களைக் கைப்பற்றியது. இவ்வாறு சிங்கள வானூர்திகளின் குண்டு வீச்சினின்று ஈழத் தமிழ்ப் பொது மக்களைப் பாதுகாக்க வல்ல; ஏவுகணைகள் கைப்பற்ற பட்ட அதே காலத்தில், வஞ்சக நெஞ்சம் கொண்ட சிங்களப்படையோ வெளிநாடுகளிட-மிருந்து மேலும் சில வானூர்திகளை வாங்கித் தமிழ்ப் பொது மக்களை வானிலிருந்து குண்டு வீசிக் கொல்லும் தனது ஆற்றலைப் பெருக்கிக் கொண்டது. ஒரு புறம் சிங்களவரின் வான்படை குண்டு வீசும் வானூர்திகளை வாங்கிக் கொள்ள; மறுபுறம் இவ் வானூர்திகளின் குண்டு வீச்சினின்று ஈழப் பொது மக்களைப் பாதுகாக்க வல்ல தரை—வான் ஏவுகணைகள் விடுதலைப் புலிகளிடமிருந்து பறிக்கப் பட. இன்று ஈழத் தமிழ் மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பு போல வெந்து, வெந்து சாகிறார்கள்.

தரை—வான் ஏவுகணைகள்தாம் ஈழத் தமிழ்ப் பொது மக்களைச் சிங்களப் படையின் வானூர்திக் குண்டு வீச்சினின்று காக்க வல்லன. இத்தகைய ஏவுகணைகளை வாங்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் முழு முனைப்புடன் ஈடுபடுவார்களானாலும் கூட, இத்தகைய ஏவுகணைகள் உடனடியாகக் கிடைத்து விடா. பல திங்களோ, ஆண்டுகளோ கூட ஆகலாம். ஆனால் ஈழத் தமிழ்ப் பொதுமக்களைப் பாதுகாத்திட **இந்த ஏவுகணைகள் உடனடியாகத் தேவைப் படுகின்றன.**

தமிழக அரசிடம் இத்தகைய தரை-வான் ஏவு-கணைகள் இருக்குமேயானால், நீங்களே அவையத்தனையையும் உங்கள் கைகளிலே அள்ளித் தலைமேலே சுமந்து, ஈழத்துக்கு எடுத்துச் சென்று **''என் அன்புத் தம்பியரே, தங்கையரே! இந்தாருங்கள் ஏவுகணைகள்!** அடுத்த முறை சிங்களவரின் வானூர்திகள் குண்டு வீச வரும்போது, இந்த ஏவு-கணைகளால் அந்த வானூர்திகளைச் சுட்டு வீழ்த்துங்கள், ஈழத் தமிழ்ப் பொதுமக்களின் உயிர்-களைக் காப்பாற்றுங்கள்'' என்று கூறி ஏவுகணை-கள் அனைத்தையும் விடுதலைப் புலிகட்குக் கொடுத்து வருவீர்கள். ஆனால் தமிழக அரசிடம் இத்தகைய ஏவுகணைகள் ஏதும் இல்லையே!

தில்லியரசிடம் இத்தகைய ஏவுகணைகள் உள்ளன. விடுதலைப் புலிகளிடமிருந்து பறித்தெடுத்த ஏவுகணைகளை, அல்லது அவை போன்ற ஏவுகணை-களைத்! தில்லியரசு விடுதலைப் புலிகட்கு உடனடியாகக் கொடுப்பதற்கான வழிவகைகளை நீங்கள் தாம் உடனடியாகச் செய்திட வேண்டும். தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையிலும, தலைமையமைச்சர் வி.பி.சிங்சின் (V. P. Singh) அரசியல் கூட்டாளி—, தனிப்பட்ட முறையில் நண்பர் என்ற முறையிலும், இதை **நீங்கள்தாம் செய்ய முடியும்.**

இந் நிலையில் இன்னுமொன்றையும் குறிப்பிடுதல் தகும். உங்கள் சொல்லுக்கிசைந்து தலைமையமைச்சர் வி.பி.சிங் விடுதலைப் புலிகட்கு ஏவுகணைகளைக் கொடுத்தாலும் கொடுக்கா விட்டா-லும், நாளடைவில் விடுதலைப் புலிகள் வெற்றி பெறுவதும், விடுதலை பெற்ற தமிழ் ஈழம் அமை-வதும் நடந்தே தீரும். ஏற்கனவே விடுதலைப் புலி-கள் ஈழத்தின் கிழக்குப் பகுதிகளின் காட்டுப் புறங்களிலிருந்து கரந்துறை போரில் (கொரில்லாப் போரில்) ஈடுபட்டு விட்டார்கள். இது தொடரும். சிங்களவரின் வான்படையாலும் சரி, கடற்படையாலும் சரி, தரைப்படையாலும் சரி, கரந்துறை போரில் (கொரில்லாப் போரில்) விடு-தலைப் புலிகளை வெற்றி பெற முடியாதென்பது **மேனாட்டுப் படைத்துறைத் திறலாளரின்**(western military experts) **கருத்து.** கரந்துறை போரின் மூலம் பிரஞ்சுப் படையை அல்சீரியர் (Algeria) வெளியேற்றியது போல, கரந்துறை போரின் மூலம் பிரஞ்சுப் படையையும், பின்னர் அமெரிக்கப் படையையும் வியத்நாமியர் வெளியேற்றியது போல, கரந்துறை போரின் மூலம் (கொரில்லாப் போரின் மூலம்) தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் சிங்களப் படையை வெளியேற்றுவதும், தமிழ் ஈழம் விடுதலை பெற்ற நாடாக மலர்வதும் திண்ணம். (அமெரிக்கப் படையிடம் ஆயிரக் கணக்கான வானூர்திகளிருந்தன. அவற்றையெல்லாம் சுட்டு வீழ்த்துவதற்கான கருவிகள் வியத்நாமியரிடம் இருந்ததில்லை. பிரஞ்சுப் படையிடம் நூற்றுக் கணக்கான வானூர்திகளிருந்தன. அவற்றைச் சுட்டு வீழத்துவதற்கான கருவிகள் அல்சீரியரிடம் இருந்ததில்லை. ஆனாலும், கரந்துறை போரின் வழி வியத்நாமியரும், அல்சீரியரும் வெற்றி பெற்றனர்.)

நிலை அப்படியிருக்க, நீங்கள் தலைமை-யமைச்சர் வி.பி.சிங்கிடம் தரை—வான் ஏவுகணை-களை விடுதலைப் புலிகட்குக் கொடுக்கும்படி கேட்க வேண்டியதேன்? கரந்துறை போர் (கொரில்லாப் போர்) நடக்கும் காலத்தில், சிங்களப் படை ஏது-மறியாத் தமிழ்ப் பொது மக்கள் மீது வானிலிருந்து குண்டு வீசிக் கொண்டேயிருக்கும். (இன்னும் பல வானூர்திகளை ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிட-மிருந்து வாங்கும் முயற்சியில் சிங்கள அரசு ஈடு பட்டுள்ளதாகச் செய்திகள் வருகின்றன.) இலக்கக்-கணக்கான ஈழத்தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப் படுவார்கள். அதைத் தடுக்கவே, நம் உடன்பிறப்பு **ஈழத் தமிழ்ப் பொதுமக்களின் உயிர்களைப் பாது-காக்கவே** இந்த தரை—வான் ஏவுகணைகள் தேவைப்படுகின்றன. விரைவிலேயே, தேவையான ஏவுகணைகள் விடுதலைப் புலிகளின் கைக்குக் கிடைக்க நீங்கள்தாம் ஆவன செய்திட வேண்டும்.

Scanned with CamScanner

கருத்து மடல்கள்!

1. இந்துமதப் புறக்கணிப்பு.

பேரன்பு கொண்ட பெருந்தகை பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

தமிழ்நிலம் இதழெண் : 139 கண்டேன். தமிழர்கள் இந்து மதத்திலிருந்து வெளியேற வேண்டும்—என்று தலைப்பிட்டு எழுதியிருந்ததைக் கண்ணுற்றேன். பார்ப்பனியத்தை எதிர்ப்பவர்கள் இந்து மதத்தையும் எதிர்த்தாக வேண்டும். நீண்ட காலமாகவே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது என்றாலும், இதற்கான ஒத்த கருத்துடையவர்கள் ஒன்றிணைந்து செயல் படாமையே இம் முயற்சி வெற்றி பெறாததற்குக் காரணம். 'சிவவாக்கியர்' உள்ளிட்ட தமிழகத்தின் புகழ் பெற்ற சித்தர்கள் பலர் பார்ப்பனியத்தையும், மதம் வழியாகப் பரப்பப்பட்ட மூடக் கருத்துகளையும் கடுமையாகச் சாடியிருக்கிறார்கள். பொதுவாக மதம், சமயம் என்றாலே இறைமைக் கொள்கையை நடுவாக வைத்தே இயங்குகின்றன. இந்நிலையில் இந்து மதத்திலிருந்து வெளியேற வேண்டும் எனக் கூறினால், பொதுமக்கள் "கடவுள் இல்லை எனக் கூறும் கூட்டம் இது" என்று நம்மைப் புறந்தள்ளி விடுவார்கள். திராவிடர் கழகம் பொதுமக்கள் இடையே சரியான அளவில் வேரூன்றாததே இதற்குச் சான்றாகும். இந்நிலையில் நாமும் இறைமையைப் பற்றிய சரியான விளக்கத்தை மக்கள் முன் வைக்கவில்லை என்றால், இந்து மத வெளியேற்றம் வெற்றி பெறாது என்றே நினைக்கிறேன்.

இயங்குகின்ற எல்லா உயிரினங்களும் இனப்பெருக்கம் செய்து தன் 'சேயை' அப்படியே விட்டு விடுவதில்லை. தாய்ப்பாசத்தைக் காட்டிச் சிறிது காலமாவது தன் பொறுப்பில் வைத்துக் கொள்கிறது. இந்த அறிவு எங்கிருந்து வந்தது? எல்லாம் இயற்கைதான் என்றாலும் அனைத்துக்கும் மூலமான ஒரு பேராற்றல் இருக்கத்தானே செய்யும். அந்தப் பேராற்றலையே நமது முன்னோர்கள் உணர்ந்து மக்களிடம் பரப்ப முயன்றார்கள். சமயங்கள் வளர்ந்தது எல்லாம் தமிழர் சமயங்களாக. ஆரியர் வருகைக்குப் பின்னரே தமிழர் சமயங்களை மூடக்கி இறைமையைத் தம் பிழைப்புக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். இன்று தமிழினத்தையே ஆளுமை செய்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே, உண்மையான இறைமையை நாம் அடையாளம் காட்ட வேண்டும். இந்து மதத்திலிருந்து வெளியேறிய பிறகு, மீண்டும் பிரிந்து விடாமல் இருக்க ஓர் அமைப்பு தேவை. அதையே தமிழர் சமயம், தமிழர் மதம் என்றும் கூறலாம். இந்தத் தமிழர் சமயத்தை உருவாக்க ஒத்த கருத்துடையவர்களை ஒருங்கிணைத்து முதலில் உயர் மட்ட அளவில் ஒரு கலந்துரையாடல் நடத்திக் கருத்தொற்றுமை வந்தபின் ஆங்காங்கே பொது மக்கள் முன்னிலையில் இதைப் பற்றித் தருக்கம் செய்யலாம்.

திராவிடர் கழகம், மதுரை சிவனிய மடத் தலைவர், குன்றக்குடி அடிகளார், வள்ளலாரைப் பின் பற்றும் சமயத்தினர், தமிழர் மதம் தொடர்பான ஆய்வாளர்கள், அறிஞர்கள், வேற்று மதங்களில் உள்ள தமிழர் நலம் நாடுவோர் ஆகியோரை அழைத்து உடனடியாகச் செயல்பட வேண்டும் என விரும்புகிறேன்.

இறைமையைப் பற்றிய சரியான விளக்கம், மற்றும் வழிகாட்டுதல் மூலம்தான் பார்ப்பனியத்தை ஒழிக்க முடியும் என்பது என் கருத்து. தி.க.வினர் போன்று கடவுள் இல்லவே இல்லை என்று கூறுவது, மக்களை நம்மிடமிருந்து புறநிலை(அந்நிய)ப் படுத்தும் செயல் தான். உண்மையான கடவுள் தன்மை இ'து என்று நாம் அடையாளம் காட்ட வேண்டும்.

என் தமிழுணர்வுக்கு ஆசிரியர் தாங்கள்தாம் என்றால், உண்மையான இறை உணர்வை ஊட்டிய ஆசிரியர் அருட்தந்தை வேதாத்திரி மாமுனிவர் ஆவார்கள். பார்ப்பனிய எதிர்ப்பை நேரடியாகக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இருபதாம் நூற்றாண்டின் உலக வரலாறு எழுதப் படும் போது, ஈழத் தமிழர்களைச் சிங்களப் படை இனப்படுகொலை (genocide) செய்த வரலாறும் எழுதப்படும். இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பின், இருநூறு ஆண்டுகளுக்குப்பின், ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின், உலக வரலாற்றைப் படிக்கும் தமிழ் மாணவர்கள், சீனத்து மாணவர்கள், சப்பானிய மாணவர்கள், உருசிய மாணவர்கள் ஐரோப்பிய மாணவர்கள், அமெரிக்க மாணவர்கள், "ஈழத்திலே தமிழர்கள் இனப் படுகொலைக்கு (genocide) ஆட்பட்டபோது, பக்கத்துத் தமிழகத்தின முதலமைச்சர் முனைவர் (டாக்டர்) மு.கருணாநிதி தம் உடன் பிறப்புத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப் படுவதைத் தடுக்கு மாற்றான், தரை—வான் ஏவுகணைகளை ஈழத்துக்கு அனுப்பி வைத்திட வழி வகுத்தார்" என்று படிக்க வேண்டும். அதுவே உங்கள் தமிழ்த் தொண்டின் கொடுமுடியாய் (சிகரமாய்) அமையும்.

வாழி தமிழ்மொழி! வாழி தமிழினம்!

அன்பன்,

தஞ்சை நலங்கிள்ளி

பின் குறிப்பு:- இம்மடலில் நான் எழுதியுள்ள விளக்கங்கள் பலவும் உங்களுக்குத் தெரிந்தவையே. ஆயினும், இம்மடல் ஒரு திறவை மடல் (open letter) ஆதலின், இதனைப் படிக்கும் பிறரும் இவ் விளக்கங்களைத் தெரிந்து கொள்ளு மாற்றான், சில விளக்கங்கள் சற்று விளக்கமாகவே எழுதப் பட்டுள்ளன.

O

காட்டுவதில்லை. தமது தாய்மொழி உணர்வை வெளிப்படையாகக் காட்டுபவர். ஒகப் பயிற்சியின் மூலம் தம் அருட்பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்பதை நமது தமிழறிஞர்கள் தனியே காட்டுக்குச் சென்று குடும்பத்தை விட்டு, இல்லறத்தை விட்டு ஒதுங்கி விட வேண்டும் என்று பொருள் கூறுகிறார்கள். ஆனால் தனித்திரு என்பதை எண்ணத்தால் தனித்து இயங்க வேண்டும் என்று வேதாத்திரி மாமுனிவர் கூறுகிறார். வரும் ஆகத்து 90 உடன் 80 ஆவது அகவையைத் தொட இருக்கின்ற இவர், இந்த மக்கள் குமுகத்தை விட்டு ஒதுங்கி விடாமல் தம் அருட்பணிகளை மட்டுமல்லாமல் அறிவுப் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றார். 'உலக சமயம்' என்ற சமயத்தைத் 5 ஆண்டுகளாகச் செயல் படுத்துகிறார். இவரையும் தொடர்பு கொண்டு தமிழர் சமயத்தைப் பற்றி முடிவெடுக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். இவரைச் சார்ந்த (சமுதாய சேவா சங்கம், 20. 2ஆவது கடற்கரைச் சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர் சென்னை-600 041 தொலைபேசி—411692) உலக சமுதாயச் சங்கத்தைத் தொடர்பு கொள்ளலாம். பணம் பெற்றுக் கொண்டுதான் ஒகப் பயிற்சிகளைச் சொல்லித் தருகின்றார் என இவர் மீது குற்றம் சாட்டுவோர் உண்டு. தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வடிக்கட்டுதல்தான் இது. இவருடைய கருத்துகள் மிகப் பரவலாக மக்களிடையே பரவி வருகிறது- இதற்குக் காரணம் ***பெரியார் ஈ.வே. ரா. விதைத்து விட்டுச் சென்ற விதைகள்தாம் காரணம்*** என்று கூறுகிறார்.

பார்ப்பனர்கள் இறைமையை வைத்துத் தமிழர்களை அடிமைப்படுத்துகிறார்கள். அந்தத் துறையை நாம் கைப்பற்றி அதன் மூலம் தமிழர்களை விழிப்படையச் செய்து பார்ப்பனீயத்தை ஒழிக்க முடியும் என்பது என் ஆழ்ந்த நம்பிக்கை. இது பற்றி அறிஞர் பெருமக்கள்தாம் முடிவு செய்து செயல்படுத்த வேண்டும்,

நன்றி! வணக்கம் தங்களன்புள்ள,
மணலி புதுநகர், சென்னை. சு. திருவாணன்,

2. தென்மொழிக் கொள்கைக்கு முரணானது!

பேரன்புப் பெருந்தகையீர்! வணக்கம்.

தமிழ்நிலம் எண் 139: இதழில் "தமிழர்கள் இந்து மதத்திலிருந்து வெளியேற வேண்டும்" என்ற தங்களின் கருத்துரையைப் படித்தேன். படித்ததும் வருந்தினேன், வருந்தியதற்குக் காரணியம், இது தென்மொழிக் கொள்கைக்கு முரணானது என்பதே.

தென்மொழிக் கொள்கைக்கு முரணானது என்பதோடு செயற்படுத்தவும் இயலாதது. ஐந்து கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் அனைவரையும் இந்துமதத்தை விட்டு வெளியேறச் செய்வது எப்படி முடியும்? எண்ணிப்பாருங்கள்!

எனவே இது தேவையற்ற, பயனற்ற, காலத்தை, பொருளை வீணாக்குகிற செயலே என்பது என்னுடைய கருத்தாகும். அத்தோடு நமக்குத் தோல்வியையும், தலைக்குனிவையும் உண்டாக்கித் தென்மொழிக் கொள்கையை இழித்தும், பழித்தும், பகடிசெய்தும் தென்மொழிக்கு மடல் தீட்டிய தி.மு.க. தமிழர்களுக்கு வெற்றியையும் மகிழ்ச்சியையும் தருவதாகும்.

"நமது இழிவிற்கும், தாழ்விற்கும், அடிமை நிலைக்கும், மடமை நிலைக்கும், கொடுமை நிலைக்கும் காரணமாயிருப்பது பார்ப்பனியமே. இந்தப் பார்ப்பனியத்தைக் காப்பது இந்துமதமே. இந்து மதத்தைக் காப்பது இந்திய வல்லரசே.

எனவே, பார்ப்பனியக் கொடுமையிலிருந்து நாம் மீளவேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடியிலிருந்து விடுபட்டாக வேண்டும். ஆகவே, தமிழக விடுதலைதான் நம்மூச்சு, நோக்கம் கொள்கை, முயற்சி என்று, தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்" எனத் தென்மொழி முழக்கமிடுகிறது.

ஆகையால், விடுதலை ஒன்றுதான் நம்மை இழிவு நிலையிலிருந்தும் தாழ்வு நிலையிலிருந்தும் அடிமை நிலையிலிருந்தும் நம்மை விடுவித்துத் தன்னுரிமையோடு தனியரசோச்சித், தலை நிமிர்ந்து வாழ வைக்கும் ஆற்றல் கொண்டது.

இதனால், உ.த.மு.க. இயக்கமும், பிற தோழமை இயக்கங்களும், கட்சிகளும் இணைந்து நடத்தவிருக்கும் மாநாட்டைத் தமிழின விடுதலை மாநாடு என்றோ, அல்லது தமிழின விடுதலைக் கருத்தறிவிப்பு மாநாடு என்றோ நடத்தினால் பயனுள்ளதாக இருக்குமென்பது என்னுடைய கருத்து. ஏனெனில் இன்று தமிழ் இளைஞர்களிடம் இனவெழுச்சி நிலை பரவலாகக் காணப்படுகிறது. முதியவர்களிடமும் ஓரளவிற்கு இருக்கிறது. மேற்கூறியபடி மாநாட்டை நடத்தினால் தமிழ்நாட்டின் இனவெழுச்சி நிலையையும் நாம் அறிந்துகொள்ள முடியும். கருணாநிதியாரின் போக்கையும் தெளிவாக அறிந்துகொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். சூழ்நிலையும் இதற்கு ஏற்றவாறு உள்ளது. எனவே சிந்தித்து முடிவெடுக்குவாறு தங்களை வேண்டிக்கொள்கிறேன். வணக்கம். இன்னணம்,

பாவலர்—சின்னப்பனார், கொம்மக்கோயில்.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டு கொள்கிறோம். ○

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். அதற்காக உரு 2.44 இலக்கம் செலவிட்டிருக்கிறது.

அவ்வாறு கருத்துரையாளர் இருந்த காலத்தில் உரு 7.30 இலக்கம் மதிப்புள்ள பொத்தகங்கள் மட்டுமே அச்சிடப் பெற்றதாகவும், அதிலும் அச்சிடப் பெற்ற பொத்தகம் ஒவ்வொன்றுக்கும் உரு 25.84 மேனி இழப்பு ஏற்பட்டதாகவும் தணிக்கையாளர் அறிக்கை கூறுகிறது.

8) இந் நிறுவனத்தில் கருத்தாளர் குழுவுக்காக அலுவலகப் பொருள்களை மட்டும் வாங்க உரு 4.06 இலக்கம் இந் நிறுவனத்தால் செலவிடப் பெற்றுள்ளது. இவையன்றி ஒரு நுண்பட வரை கருவியும், ஒரு கணினியும் உரு 7.02 இலக்கத்திற்கு வாங்கப் பெற்றுள்ளன. ஆனால் அக் கருவிகளை ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக அந் நிறுவனம் பயன் படுத்தவில்லை.

அரசுடைமையாக்கப்பட்டுள்ள வைப்பகங்களில் தவறான ஆளுமை, ஊழல், பணக் கையாடல், தாறுமாறான நடவடிக்கைகள் மிகப் பெருகி வருகின்றன. இவற்றால் கவலை அடைந்துள்ளது அரசு. இவற்றைத் தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளது. கடந்த ஆறு மாதங்களில் நடந்த வைப்பக (வங்கி) ஊழல்களில் இரண்டு பெரிய அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்பெற்றுள்ளனர் என்பதைப் பொருள் அமைச்சர் மது தண்டவதே ஒருமுறை மக்களவையில் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த ஆண்டு மட்டும் 83 வைப்பக ஊழியர்கள் ஊழல் தொடர்பாகத் தண்டிக்கப் பட்டுள்ளனர் என்றும், 375 ஊழியர்கள் பதவியிலிருந்து நீக்கப் பட்டுள்ளனர் என்றும், 4014 ஊழியர்களுக்கு எதிராக நேரடி ஊசாவல் நடந்து வருகின்றது என்றும் குறிப்பிட்டார். அத்துடன் அரசின் இந்த நடவடிக்கைகளும் கூட போதுமானவையல்ல என்றும் அவர் குறிப்பிட்டது, ஊழல்களின் கடுமையைக் காட்டுவதாக உள்ளது. இது தொடர்பாக வைப்பகங்களில் மேலும் கண்காணிப்புப் பணிகளை அரசின் ரிசர்வ் வைப்பகம் ஆய்வு நடத்தி வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றின்மேல் கருத்தறிவித்த பொருள் அமைச்சர், வைப்பகங்கள் ஊதியம் தொடர்பாகக் கொடுக்கின்ற கணக்குகள்; கூட தவறானவையாகவும் பொய்யாகவும் இருக்கின்றன என்றும் இவற்றைச் சரிப்படுத்த தணிக்கை அதிகாரக் குழு (கமிஷன்) ஒன்று அமைக்கப் பட வேண்டும் என்றும், குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

ஒரு முறை, நடுவண் பொருள்துறை துணையமைச்சர் அனில் சாத்திரி அவர்கள் மாநிலங்கள் அவையில் வைப்பக ஊழல் தொடர்பாகப் பின்வரும் புள்ளி விளக்கம் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். 1988-ஆம் ஆண்டு வைப்பகங்களில் 1837 ஊழல், பணக் கையாடல் நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்றும், அவற்றால் அரசுப் பணம் உரு 26.59 கோடிக்கு கையாடப் பெற்றுள்ளது என்றும், 1989-ஆம் ஆண்டு உரு. 50.22 கோடிக்கு 1584 ஊழல் நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்றும் கூறினார்.

இத்தகைய ஊழல்கள், நடுவண் ஆயத்துறை, வரி, விதிப்புத் துறையிலும் பெருமளவில் பரவியுள்ளதாக நடுவணரசின் தலைமைத் தணிக்கை அலுவலகம் கண்டுபிடித்து அரசுக்கு அறிக்கை கொடுத்துள்ளது.

வெளி நாடுகளிலிருந்து திருட்டுத்தனமாகக் கொண்டுவரப்படும் பொருள்களைக் கண்டு பிடித்துத் தீர்வை போடும் பொழுது, ஆயத்துறை அதிகாரிகள் கையூட்டு வாங்கிக் கொண்டு, சுங்க வரியைக் குறைத்துப் போடுகிற முறைகேடுகள், பறிமுதல் செய்யப்படும் பொருள்களை ஏலம் விடுவதில் செய்யும் ஊழல்கள்—இவற்றால் அரசுக்கு 1988-89 ஆம் ஆண்டில் உரு 221.17 கோடி வருமான இழப்பு நேர்ந்துள்ளதாக அத்தணிக்கை அலுவலகம் கூறியுள்ளது.

அதேபோல் உருவாக்க வரிவிதிப்பில் உரு 45.05 கோடி வருமான இழப்பும், கைப்பற்றப்பட்ட மருந்துகள், வேதியல் பொருள் இவற்றைக் குறித்த காலத்தில் விலைபோக்காமல் மெத்தனமாக இருந்ததால் உரு 19.6 கோடி இழப்பும், மதுக்குடிப்புப் பொருள்கள், கைக்கடிகாரங்கள், மின்னணுப் பொருள்கள் ஆகியவற்றில் காலத்தாழ்த்தம் ஏற்பட்டதால் உரு 3.48 கோடி இழப்பும், வெளி நாட்டு உருபாத் தாள்கள், வரைவோலைகள் ஆகியவற்றைக் குறித்த காலத்தில் மாற்றுமற் போனதால் உரு 3.48 கோடி இழப்பும் ஏற்பட்டுள்ளதாகத் தணிக்கைத் தலைமையக அறிக்கை கூறுகிறது. என்னே, பொதுப் பணத்தை வாரி விழுங்கும் முதலையாளுமை! இதனை யார்தாம் சரி செய்வது?

இன்னோர் ஊழல் மிகக் கொடுமையானது. செயற்கை இழைநூல், மற்றும் செயற்கை இழைத் துணிகள் இவற்றுக்கு நடுவண் அரசு உருவாக்க வரி போடுவதிலும், அதைத் தண்டுவதிலும், பல வகையான முறைகேடுகள் (பொருள் மதிப்பீட்டைக் குறைத்துக் காட்டி வரியைக் குறைப்பது, வரியைச் சலுகையாய்த் தள்ளுபடி செய்வது, தரப்பகுப்பில் தவறாகக் காட்டி வரியைக் குறைப்பது போன்ற ஊழல்களும், அவ்வாறு செய்தவற்றில் கணிசமான கழிவு பெறுவதும் ஆகியவற்றைச்) செய்ததால், அரசுக்கு வரவேண்டிய ஞாயமான வருமானம் உரு. 53.82 கோடி இழப்பு ஏற்பட்டதாக அவ்வறிக்கையில் சுட்டப் பெற்றுள்ளது. இவ்வாறு

நாட்டில் உள்ள 22 ஆலைகளில் நடந்துள்ளனவாம். இவற்றுள் சென்னை, திருச்சி ஆகிய நகரங்களில் உள்ள ஆலைகளும் அடங்கும்.

அடுத்து, நடுவண் அமைச்சகத்தில் உள்ள விளம்பர இயக்குநர் அலுவலகத்தில் பெருத்த ஊழல்கள் இடைவிடாமல் நடந்து கொண்டே உள்ளன. மூன்று முடுந்து (வேன்)களுக்கு மேற்கூடுகள் (Bodies) கட்டுவதில் உரு. 5.88 இலக்கம் வீணாக்கப் பட்டுள்ளது. இன்னொரு வகையில் உந்துகளுக்கு அடிச் சட்டங்கள் செய்வதில் 5 ஆண்டுகள் காலத் தாழ்த்தம் செய்து பல இலக்க உருபா பாழடித்துள்ளது. இதைவிட இத்துணைச் செலவு செய்தும் அந்த முடுந்துகள் பலவகையான தொழில் நுணுக்கக் கோளாறுகளால் பயன் படுத்தப் பெறுமல் இருப்பதுதான். இவ் விளைவால், வேறு வகையான போக்கு வரத்துக்காக உரு. 3.15 இலக்கம் செலவு செய்திருப்பது, அரசுப் பொறியின் அத்தனைப் பற்களும் ஊழல் நிறைந்தனவாக இருப்பதையே காட்டுகிறது.

இனி, இவ்வகையில் இன்னொரு வியப்பான ஊழல் என்ன வென்றல், ஒரு நிறுவனத்திடம் இப் பணியை ஒப்படைத்து, உரு. 2.18 இலக்கம் முன் பணமாகச் செலுத்திப் பின்னர் அந் நிறுவனத்திடமிருந்து அப் பணியை வாங்கி வேறொரு நிறுவனத்திடம் ஒப்படைப்புச் செய்ததில், முந்தைய நிறுவனம் கட்டிய முன் பணத் தொகையில் 20 விழுக்காடு குறைத்துக் கொண்டதும், பிந்திய நிறுவனம் தன் மதிப்பு கூட்டுத் தொகையை உயர்த்திக் கொண்டதும் ஆகிய முறைகேடுகளால் அரசுக்கு உரு. 98 ஆயிரம் இழப்பேற்பட்டிருப்பது தான்.

இப்படி அரசின் பல நிலைகளிலும் கையூட்டு (இலஞ்சங்)களும், ஊழல்களும், முறைகேடுகளும், தவறுகளும், குற்றங்களும், இந் நாட்டின் பழம் பெருமைகளைப் போலவே தலைவிரித்துப் பேயாட்டம் ஆடுகின்றன. இதில் என்ன வியப்பு என்றல், இம் முறை கேடுகளுக்கு ஆயிரம் முகங்கள். அவற்றுக்கான தலைகள் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. ஒவ்வொரு நிலை முறைகேடும், அதன் மேனிலை அதிகாரங்கள் அல்லது அதிகாரிகளுடன் முடிபோட்டு பின்னிப் பிணைந்து கொண்டு கிடக்கின்றன. இம் முடிச்சுகளின் தலைமுனை எது வால்முனை எது என்று எவராலும் கணித்தறிய முடியாதபடி மயங்கிக் கிடக்கின்றன. இவற்றை கண்டு பிடிப்பதும் கடினம்; கண்டு பிடித்தாலும் அவற்றை வெளிப்படுத்துவதும் மிகக் கடினம்; வெளிப்படுத்தினலும் அரசு அதன் மேல் நடவடிக்கை எடுப்பதோ மிக மிகக் கடினம்; இனி தப்பித் தவறி நடவடிக்கை எடுக்கப் பட்டாலும் அதைச் செயல் படுத்துவதோ மிக மிக மிகக் கடினம்! அப்படியொரு நிலை, நம் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் தெரிந்த வகையில், இந்தியாவில் எப்பொழுதும் இனி ஏற்படப் போவதில்லை; ஏற்பட வழியே இல்லை. ஏனெனில் நம் அரசியல், அமைப்பியல், குற்றவியல், நெறியியல் சட்டங்களும் ஊழல்களும் அவ்வாறு ஒன்றுக்கு ஒன்று அடிப்படையாகவும் ஆதரவாகவுமே அமைந்து கிடக்கின்றன. அறமும் மறமும், நன்றும் தீதும், உண்மையும் பொய்யும், அதிகாரமும் ஊழலும் மயங்கிக் கிடக்கின்ற அரசியலே நம் நாட்டு அரசியல்! இவற்றுக்கு அடிப்படையான வலிவான சில கூற்றுகளுடன் இக் கட்டுரையை நாம் முடித்துக் கொள்வோம். வீட்டைக் கட்டும் போதே நாம் எப்படி கழிவறையையும் வைத்துக் கட்டுகிறோமோ, அப்படியே அரசியல் அமைப்பை—சட்டங்களை அமைக்கும் போதே ஊழல்களையும் நாம் வைத்தே அமைத்துக் கொண்டோம். கட்டுச் சோற்றுக்குள் வைத்துக் கட்டிய பெருச்சாளி போன்றதே இங்குள்ள ஊழல்!

இனி, ஊழல்களுக்கே கொடுமுடியாக விளங்குவது, அவ் வூழல்களையும், முறைகேடுகளையும், கையூட்டுகளையும் கண்டு பிடித்துத் தண்டனை வழங்கச் செய்யும், காவல்துறையும் ஒற்றுத்துறையும் கூட, ஊழல் மிகுந்த, முறைகேடுகள் நிறைந்த கையூட்டுகள் மிக்கோங்கிய அதிகாரத்துறைகளாக வளர்ந்து நிற்பதுதான்! வேலியே பயிரை மேய்ந்தால் அப் பயிரைக் காப்பது எது?

காவல் துறையில், கண்காணிப்புப் பிரிவு (Vigilance) என்று ஒரு பிரிவு உண்டு. இப்பிரிவு கையூட்டு ஒழிப்புகள், முறைகேடான குற்றங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து வழக்குப் போட்டு, அவற்றில் ஈடுபடும் குற்றஞ் செய்யும் அதிகாரிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருவது முதல், பதவிக் குறைப்பு, பதவியினின்று நீக்குதல் முதலிய செயல்பாடுகளைக் கவனிக்கிறது. இந்தத் துறையில் பெரும்பாலும் கையூட்டு வாங்குவது பெருகி வருகிறது மிகக் கொடுமையாகவும் கடுமையாகவும் உள்ளது.

இந்தத் துறையில் ஆய்வாளராக இருந்த ஒருவர் தொடக்கத்தில் விறுவிறுப்புடனும் துணிவுடனும் கையூட்டுக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் முனைப்பாக இருந்தார். அரசு அவரின் துணிவான பணியைப் பாராட்டும் வகையில் உயர்நிலை அதிகாரியாகப் போட்டபின் அவர் நிறைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் முனைப்பாக இருப்பார் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், அவரும் அதே ஊழல் நிலைக்கு ஆளாகி, தானுண்டு தன் பொருளீட்டம் உண்டு என்று இருந்து விட்டாராம்!.

இதைக் குறிப்பிட்டு மதுகர் எசு. கெப்ளே என்னும் அரசியல் நோக்கர் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறர். “பெரும்பாலும் கீழ்நிலை அரசு ஊழியர்களைப் பிடிப்பதுடன் கண்காணிப்பு

நிறுவனங்கள் நின்று விடுகின்றன; இடைநிலை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது வியப்பு-தான்; இனி மேல்நிலை அதிகாரிகளோ பிடிபடுவதே இல்லை.'

''வருவாய்த் துறைக் கீழ்நிலைச் சிற்றூர்ப்புற அதிகாரிகள், சுங்கவரிப் பணியாளர்கள், போக்கு-வரத்துக் காவலர்கள் போன்றவர்கள் 'கையுங் களவுமாகப்' பிடிபட்ட செய்திகளே செய்தித் தாள்-களில் வெளி வருகின்றன. அடுத்து, காவல்துறை ஆய்வாளர், துணைப் பொறியாளர், வருமான வரி ஆய்வாளர் போன்ற அதிகாரிகள் பிடிபட்டதாக எப்போதாவது செய்தி வருவதுண்டு. ஆனால், தொழிற்சாலைகளிலிருந்து வழக்கமாகப் பெருந்-தொகை (மாதந் தவறாமல் வரும் கையூட்டு வருமானம்—'மாமூல்') பெற்றுவரும் ஒரு தொழிற்-சாலை ஆய்வாளர் அல்லது பொருளாக்க வரித்-துறைக் கண்காணிப்பாளர் அல்லது தம்முடைய அலுவலகத்தில் வேலை நாடுபவரிடமிருந்து கையூட்டு வாங்கும் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் பிடிக்கப் பட்டதாகச் செய்திகள் வெளிவருகின்-றனவா? இல்லையே!

இதே போல் பல எடுத்துக் காட்டுகளைக் கூறலாம்.

ஊழல், ஏமாற்றுச் செயல்களில் ஈடுபடும் தொழில் முதலாளி ஒருவரின் செலவில், ஐந்து விண்மீன் விடுதி ஒன்றில், வழக்கமாகத் தங்கி நலன்கள் பெற்று வரும் தொழிலாளர் நல ஆணையர் ஒருவர் என்றுமே பிடிப்பட்டதில்லை.

அதேபோல், காவல்துறை உயர் அதிகாரி ஒருவரின் மகன், மாதம் உரு. 20,000 வாடகையில் 'மெர்சிடிசு' மகிழுந்து ஒன்றை வெளிப்படையாகப் பயன்படுத்தி வருவது, அத்துறையில் உள்ள அனைவர்க்குமே தெரியும். இருப்பினும் அது பற்றி இன்று வரை எந்த நடவடிக்கையும் எவருமே எடுக்கவில்லை.

உள்துறைச் செயலர் ஒருவர், பெரும் பணக்-காரர்களுக்கான மருத்துவமனை ஒன்றில் மருத்துவம் பார்த்துக் கொண்டதும், அதன் பின்னர் ஐந்து விண்மீன் விடுதி ஒன்றில் தொழில் முதலாளி ஒருவர் சார்பில் ஓய்வு பெற்றதும், அந்த விடுதி-யின் ஒருநாள் வாடகை, அவ்வதிகாரியின் ஒரு மாதச் சம்பளத்தை விட அதிகமாக இருப்பதும், அவருடன் பணி செய்யும் அனைவரும், ஒற்றுத் துறை, கண்காணிப்புத் துறை அதிகாரிகள் அனைவரும் அறிவர். ஆனாலும் அந்தச் செயலர் இன்று வரை பிடிபட்டதில்லை. அவர் மட்டுமல்லர், அவர் போல் முறைகேடாக இயங்குகின்ற உயர்-நெறிமன்ற, உச்ச நெறி மன்ற நடுவர்கள் எவருமே பிடிபட்டதில்லை.

இன்னொரு வெட்கக்கேடான நிலை ஒன்று. காவல்துறைக் கண்காணிப்பாளர் ஒருவர் மீது, நான்கு ஆண்டுகளுக்குள் இரண்டாவது முறை-யாகக் கையூட்டுக் குற்றச்சாட்டு வந்தது. அது பற்றிய உசாவலை விரைவாக முடிப்பதற்காக என்று காரணம் காட்டி, அவரைத் தலைமை அலுவலகத்-துக்கு மாற்றியது அரசு. ஆனால், அவர் மாற்றுப் பதவியில் போய் அமர்ந்தவுடன் அரசு அவர் மீதிருந்த குற்றச் சாட்டைக் கை விட்டது. இதனால் ஊக்கமடைந்த அவர், இன்னும் தீவிரமாகக் கையூட்டுத் திருவிளையாடலில் ஈடுபட்டார், அது பற்றி மீண்டும் வலிவான குற்றச்சாட்டுகள் கிளம்-பின. ஆனால் அரசு என்ன செய்தது? அவருடைய தனி உள்முக எழுத்தரைப் பதவி நீக்கம் செய்து விட்டு, அவரை மாநிலக் காவலர் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராகப் பதவி அமர்த்தம் செய்தது. அவருக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலானது. அந்த அமர்த்தம் அக் கல்லூரி-யில் பயிலும் பயிற்சியாளர்கள் இறுதித் தேர்வில் தேரச் செய்வதற்காக அவர்களிடமிருந்து அவர் கையூட்டுப் பெறத் தொடங்கி விட்டார். எனவே மேலும் அவர் மீது முறையீடுகள் தொடர்ந்தன. அரசு மீண்டும் என்ன செய்தது? அவரை மீண்டும் வேறொரு பொறுப்பான பதவிக்கு மாற்றியது. அங்கும் அவர் கையூட்டுத் தொழில் நன்கு நடை பெற்றது. அதனால் அரசு அவரின் சொந்த மாநிலத்துக்கு மாற்றியது. இதற்கு மேல் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மற்றொரு வழக்கில், காவல்துறைக் கண்-காணிப்பாளர் ஒருவர் மீது, பல குற்றச்சாட்டுகள் கூறப்பெற்றன. காவலர் நல்வாழ்வுக் கூடம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்த குத்தகைக்-காரரிடம் நிறைய கையூட்டுப் பெற்றதாகவும், அந்தக் கட்டடப் பொருள்களைத் தம் வீட்டைக் கட்டப் பயன்படுத்திக் கொண்டதாகவும், அங்குப் பயன்பட்டு வந்த ஊர்திகளையும், அதில் ஈடுபட்டு வந்த ஊழியர்களையும், தம் சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டதாகவும் அவர்மேல் குற்றச்-சாட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கையூட்டு ஒழிப்புத் துறைக் கண்காணிப்புக் காவலர்கள் இது பற்றித் தீவிரமாக உசாவிப் பல சான்றுகளுடன் குற்ற அறிக்கையெல்லாம் அணியப் படுத்தினர். ஆனால் வழக்கு போடப் பெறவில்லை. அரசு அவருக்கு மென்மையான பார்வையுடன் கட்டாய ஓய்வு கொடுத்து, அவர் முறைகேடாகக் கட்டிய வீட்டில் மகிழ்ச்சியாக வாழும்படி செய்து விட்டது.

இவ்வாறு தங்களின் சட்ட முறையிலான வருமானங்களை விட, மிக அதிகமான பெறுமானம் உள்ள வகையில் வாங்கியுள்ள நிலபுலங்களையும் மற்ற சொத்துகளையும் திரட்டிய ஊழல் அதிகாரி-களை இன்றும் கூட அரசு கண்டும் காணாமல் இருக்-கிறது.

இந்த வகையில் மதுகர் எசு. கெப்ளே கூறும் செய்திகள் சில மிகவும் வியப்பாகவும் வேடிக்கை-

யாகவும் நண்டைச் சுட்டு நரியைக் காவலுக்கு வைக்கும் தன்மைபோல் அஞ்சத்தக்கனவாகவும் உள்ளன.

காவல்துறைக் கண்காணிப்புப் பிரிவு இவ்வகையில் மிகவும் முகாமையானது. அதிலேயே ஊழலும் முறைகேடுகளும் நடக்கின்றன என்றால் என்ன செய்வது? யாரிடம் போய் முறையிடுவது? திருட்டு, கொள்ளை, கொலை, கற்பழிப்பு ஆகிய குற்றங்களில் கைதேர்ந்த ஒருவனே அறமன்ற நடுவராக அமைந்தால் நிலை என்னாகும்?

காவல்துறைக் கண்காணிப்புப் பிரிவின் உயரதிகாரியாக இருந்து, ஊழல்களில் கடுமையான குற்றங்கள் செய்து கெட்ட பெயரெடுத்த ஒருவரைச் சிறிது காலத்திற்கு முன், கையூட்டு ஒழிப்பு நிறுவனம் ஒன்றின் தலைவராக அரசு அமர்த்தியது. அவர் ஓய்வு பெறுவதற்குச் சிறிது காலமே இருந்தது. அதற்குள் அவர் அகப்பட்டதைச் சுருட்ட ஆசைப் பட்டார். ஆனால் அதற்கு இப்பொழுது தாம் ஏற்றுள்ள பொறுப்பில் எந்த வழியுமில்லை என்று தெரிந்து கொண்டார். எனவே, அவர், முதலமைச்சரின் உறவினர் ஒருவரைப் பிடித்துத் தாம் முன்பிருந்த காவல்துறைக் கண்காணிப்புப் பிரிவின் உயர் பதவியிலேயே அமர்த்தப் பெற்று; தாம் விரும்பியபடி பொருள் திரட்டிக் கொள்ளும் வாய்ப்பை அரசின் உதவியாலேயே பெற்றுக் கொண்டார் எனில் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது?

இன்னொரு நிலையில், பொய்யான பயணப்படி கோரிப் பெற்றதாக எழுத்து நிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஓர் அதிகாரி, கண்காணிப்புப் பிரிவின் தலைவராக அமர்த்தம் பெற்றார். இதே போன்ற பிழை இன்னொரு முறையும் நடந்தது. இரு முறை கையூட்டுக் குற்றம் செய்து உசாவலுக்கு உள்ளாகிய ஓர் அதிகாரியை இதே கண்காணிப்புப் (Vigilence) பிரிவின் தலைவராக, மாநில அரசு அமைத்தது.

இனி, எல்லாவற்றுக்கும் முடி வைத்ததுபோல, ஒருவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த போது, தம்முடைய மனைவியின் மூலம் கையூட்டு வாங்க முயன்ற ஒருவரை, அரசு இரட்டைப் பெருமை செய்ததுபோல, பதவி உயர்வு கொடுத்து, உள்துறைச் செயலராக அதே மாநில அரசு அமர்த்தியது. இதில் என்ன கமுக்கம் என்றால், இப்படிப்பட்ட அதிகாரிகள் இருந்தால் தானே, தாங்கள் கொள்ளையடிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று ஆளுங்கட்சி அமைச்சர்கள் நினைக்கலாம் அன்றோ?

இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி விட்டுக் கெப்ளே பின்வருமாறு எழுதுகிறார்: சூழ்நிலை முழுவதுமே ஊழலாக இருக்கும் பொழுது எதுவுமே நமக்கு வியப்பளிக்க முடியாது. முதலமைச்சர் ஒருவர் தம் காவல்துறை ஆணையரிடமிருந்து வழக்கமாக ஓர் இலக்கம் உருபா கையூட்டுப் பெற்று வந்தார். அவரையடுத்து வந்த முதலமைச்சர் காவல் துறை ஆய்வர் ஒவ்வொருவரையும் அமர்த்த ஓர் இலக்கம் உருபா கையூட்டுப் பெற்றுவந்தார்.

இந் நாட்டின் பொது வாழ்விலும் அரசியல் ஆட்சித் துறையிலும் கையூட்டுகளும் ஊழலும் முறைகேடுகளும் கொள்ளையடிப்புகளுமே தவிர்க்க முடியாத அளவுக்குப் பல்கிப் பெருகிப் போய் விட்டன! இதை எத்தனைக் காந்திகள் வந்தாலும் தீர்த்துத் தூய்மையாக்கி விட முடியாது! இது வெறும் வெறுப்பால் கூறுவதன்று. உண்மை! உண்மை! முற்றிலும் உண்மை. O

பொறுத்துக் கொள்க!

பல வகையான அச்சக நெருக்கடிகளாலும், புறநிலை இடர்ப்பாடுகளாலும் இதழ்கள் காலந் தாழ்ந்து வெளி வருகின்றன. அன்புள்ளங்கள் பொறுத்துக் கொள்க.

—ஆசிரியர்

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 58

மக்களுக்குழைப்பவர்கள் வெயிலில் காய்ந்தாக வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் பிறர்க்கு நிழலைத் தர முடியும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 140

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

தனி இதழ் விலை உரு. 1-00

உறுப்பினர்:

ஆண்டுக் கட்டணம் உரு. 50-00

அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5

Scanned with CamScanner